பக்கங்கள் 15+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | கார்த்திகை 13 வியாழக்கிழமை 28.11.2024 | அதிர்வு 119

## நினைவேந்தலுக்குச் சென்றவர் விபத்தில் சிக்கி பரிதாபச் சாவு!

(த.சுபேசன்)

யாழ். கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவலடிப் பகுதியில் ஏ - 9 வீதியில் நேற்று புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் ஆண் ஒருவர் சம்பவ 04▶

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

## வடக்கில் ஒன்றரை இலட்சம் பேர் பாதிப்பு



(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாணத்தில் பொழியும் அடை மழை காரணமாக 41 ஆயிரத்து 347 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 37 ஆயிரத்து 942 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கமைய யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 18 ஆயிரத்து 630 குடும்பங்களைச் சேர்ந்த 61 ஆயிரத்து 663 பேர் 03▶

# காரைதீவு வெள்ள அனர்த்தம்: இதுவரை ஏழு சடலங்கள் மீட்பு!

### மீட்புப் பணியாளர்களின் தேடுதல் வேட்டை தொடர்கின்றது







(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்டம், காரைதீவு - மாவடிப்பள்ளிப் பகுதியில் உழவு இயந்திரம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுக் காணாமல்போனவர்களில் இதுவரை 7 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

காரைதீவு - மாவடிப்பள்ளி பகுதியில் உழவு இயந்திரத்தில் வீடு திரும்பிக் கொண்டிருந்த மதரஸா மாணவர்கள் உள்ளிட்ட பலர் வெள்ளத்தில் சிக்கிக் காணாமல்போயிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் 04▶

## குளத்தில் தவறி வீழ்ந்த இளைஞர் சடலமாக மீட்பு



(கி.வசந்தன்)

வவுனியா - மகாகச்சகொடி குளத்தில் கடந்த 26 ஆம் திகதி தவறி வீழ்ந்த இளைஞரின் சடலம் இன்று காலை மீட்கப்பட்டது.

மேற்படி இளைஞர் தனது நண்பன் ஒருவருடன் மகாகச்சகொடி குளத்திற்கு நீராடச் சென்றபோது கால் தவறி குளத்துக்குள் வீழ்ந்தார்.

இதனையடுத்து ஊர் மக்கள் மேற்படி இளைஞரைத் தேடியதுடன் மாமடு பொலிஸாருக்கும் தகவல் வழங்கினர். எனினும், கடந்த இரண்டு நாட்களாக இளைஞர் கண்டுபிடிக்கப்படவில்லை. 04▶

## சேகு இஸ்ஸதீன் காலமானார்!



(பாறுக் ஷிஹான்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக தவிசாளரும் மூத்த அரசியல்வாதியுமான வேதாந்தி சேகு இஸ்ஸதீன் இன்று காலமானார்.

சுகவீனம் காரணமாக அவர் தனது 80 ஆவது வயதில் அக்கரைப்பற்று இல்லத்தில் இன்று காலை காலமானார். 03▶




# சீரற்ற காலநிலை குறித்து வவுனியாவில் விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்




(கி.வசந்தன்)

வவுனியாவில் கடந்த சில நாட்களாக ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை தொடர்பாக ஆராய்வதற்கான விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை கூட்டுறவு பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில் நடைபெற்றது.

இதன்போது மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை பாதிப்புகள் தொடர்பாகவும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்படவேண்டிய மேலதிக நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிஷாத் பதியுதீன், காதர் மஸ்தான், ம.ஜெகதீஸ்வரன், து.ரவிகரன், செ.திலகநாதன், ப.சத்தியலிங்கம் மற்றும் அரச அதிபர் பி.ஏ.சரத் சந்திர, பிரதேச செயலாளர்கள், அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பொலிஸார், இராணுவத்தினர் உட்படப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.




# வடிகாலமைப்புச் சீரின்மையே வெள்ள அனர்த்தத்துக்குக் காரணம்

## வவுனியா கூட்டத்தில் ரவிகரன் எம்.பி. சுட்டிக்காட்டு



(கி.வசந்தன்)

வடிகாலமைப்புச் சீரின்மையாலேயே அதிகளவான இடங்களில் வெள்ள நீர் தேங்கியிருந்து பாரிய அளவில் வெள்ள அனர்த்தம் ஏற்படக் காரணமாக அமைந்தது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டினார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் அனர்த்த நிலைமைகள் குறித்து ஆராய்வதற்காக இன்று நடைபெற்ற விசேட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“வன்னியில் அதிக இடங்களில் வெள்ளம் ஏற்பட்டமைக்கு வடிகாலமைப்புச் சீரின்மையே காரணம். உரிய திணைக்களங்கள் வடிகாலமைப்பு விடயத்தில் அதிக கவனத்துடன் செயற்பட வேண்டும்.

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவு மற்றும் நிவாரணங்கள் வழங்க வேண்டும். தறப்பாள் வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.” – என்றார்.

### வெள்ளவாய்க்கால்களை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள

# சட்டவிரோதக் கட்டடங்களை உடன் இடித்து அகற்றுங்கள்!

## வடக்கு மாகாண ஆளுநர் பணிப்பு



வடக்கு மாகாணத்தில் வெள்ளம் வடிந்தோடாமல் வெள்ள வாய்க்கால்களை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோதக் கட்டடங்களை இடித்து அகற்றுமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பணிப்புரை விடுத்தார்.

இது தொடர்பில் மீண்டும் மீண்டும் பேசிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள இடர் நிலைமை தொடர்பில் ஆராயும், இணையவழி கலந்துரையாடல் இன்று காலை இடம்பெற்றது. இதன்போதே ஆளுநர் இந்த விடயத்தைச் சுட்டிக் காட்டினார்.

வடக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டங்களிலும் ஏற்பட்டுள்ள இடர் பாதிப்புக்கள் தொடர்பில் அந்தந்த மாவட்ட செயலர்கள் மற்றும் மேலதிக மாவட்ட செயலர்களால் ஆளுநருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள் வழங்கப்பட்டு வருவது தொடர்பிலும் ஆளுநரின் கவனத்துக்கு அவர்கள் கொண்டு வந்தனர்.

அனலைதீவு, எழுவைதீவு போன்ற பிரதேசங்களுக்கு மின்சாரம் பகலில் துண்டிக்கப்பட்டு இரவில் மாத்திரம் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

மின்சார விநியோகத்துக்குத் தேவையான எரிபொருள் குறிகாட்டுவான் இறங்குதுறையில் இருப்பதாகவும், கடல் பயணத்துக்கு ஏதுவான நிலைமை ஏற்பட்டதும் அவற்றை உடனடியாக கடற்படையினரின் உதவியுடன் கொண்டு செல்வதற்கு தயாராக இருப்பதாகவும் இலங்கை மின்சார சபையின் வடக்குப் பிராந்திய முகாமையாளர் கூட்டத்தில் தெரிவித்தார்.

அதேவேளை, அந்தப் பிரதேசங்களிலுள்ள மருத்துவமனைகள் மின்பிறப்பாக்கி மூலம் மின்சாரத்தைப் பெற்று இயங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது பல வெள்ள வாய்க்கால்களில் வெள்ளம் நிரம்பிய நிலையில் இருப்பதால் அதனுள் குப்பைகளைக் கொட்டுவதற்கு முயற்சிக்கக் கூடும் என்றும், அது தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் யாழ். மாநகர சபை ஆணையாளருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

வெள்ளம் வடிந்தோடாமல் இருப்பதற்கு வெள்ளவாய்க்கால்களை ஆக்கிரமித்து சட்டவிரோத கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளமையும் காரணம் என்று சுட்டிக்காட்டிய ஆளுநர், அவற்றை அகற்ற துரித நடவடிக்கை எடுக்குமாறும் பணித்தார்.

அதேபோன்று சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள ஏனைய கட்டடங்களையும் அகற்றுமாறும் ஆளுநர் பணித்ததுடன், திரும்பத் திரும்ப இந்த விடயங்கள் தொடர்பில் பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை என்றும் குறிப்பிட்டார்.

அடுத்த ஆண்டு இந்த விடயங்கள் அனைத்தும் சீராக்கப்பட்டிருப்பதை அதிகாரிகள் உறுதி செய்யவேண்டும் எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

இதேவேளை, வெள்ளம் வடிந்தோடிய பின்னர் கிணறுகளுக்கு குளோரின் இடுவதற்குரிய ஆயத்தங்கள் சுகாதாரத் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், அதேவேளை நோய் நிலைமைகள் தொடர்பில் கண்காணிப்பதற்குரிய ஏற்பாடுகளும் முழுமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரியப்படுத்தினார்.

தொடர் மழை காரணமாக பெருமளவு பயிர்கள் அழிவடைந்துள்ளதாகவும், வெள்ளம் இன்னமும் வழிந்தோடாமல் இருப்பதால் பயிர் அழிவு தொடர்பில் சரியான மதிப்பீட்டை தற்போது முன்னெடுக்க முடியாது இருப்பதாகவும் வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் குறிப்பிட்டார் என்றும் வடக்கு மாகாண ஆளுநரின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### சேகு இஸ்ஸதீன்...

அரசியல் தலைவர், எழுத்தாளர், கவிஞர் எனப் பன்முகம் கொண்ட வேதாந்தி சேகு இஸ்ஸதீன் 1986 ஆம் ஆண்டு, மறைந்த அரசியல் தலைவர் அஷ்ரப்புடன் இணைந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை ஸ்தாபித்தார்.

அத்துடன், இணைந்த வடக்கு – கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவராகவும் அவர் பதவி வகித்திருந்தார்.

2001 முதல் 2010 ஆம் ஆண்டு வரை அவர் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார்.

இந்தக் காலப்பகுதியில் ஏற்றுமதி அபிவிருத்தி அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சராகவும், தகவல், வெகுசன ஊடகப் பிரதி அமைச்சராகவும் வேதாந்தி சேகு இஸ்ஸதீன் செயற்பட்டுள்ளார்.

சட்டத்தரணியான சேகு இஸ்ஸதீன் தமது பாடசாலை நாட்களில் நாடகங்களில் பாத்திரமேற்று நடிப்பதும், இலக்கியப் படைப்புகளும் அவரது பிரதான அடையாளமாகக் காணப்பட்டன.

அன்னாரின் ஜனாஸா அக்கரைப்பற்று சின்ன பள்ளிவாசலில் மஃரிப் தொழுகையின் பின்னர் தைக்கா நகர் மைய வாடியில் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.

### வடக்கில் ஒன்றரை...

பாதிப்படைந்துள்ளனர். 80 இடைத்தங்கல் முகாம்களில் 2 ஆயிரத்து 12 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 63 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். 151 வீடுகள் பகுதியளவிலும், 7 வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் 3 ஆயிரத்து 812 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 728 பேர் பாதிப்படைந்துள்ளனர். 61 பாடசாலைகளில் 377 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 266 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 300 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 242 பேர் பாதிப்படைந்துள்ளனர். 17 இடைத்தங்கல் முகாம்களில் 394 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 208 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அதேநேரம் 3 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

மன்னார் மாவட்டத்தில் 15 ஆயிரத்து 205 குடும்பங்களைச் சேர்ந்த 52 ஆயிரத்து 487 பேர் பாதிப்படைந்துள்ளனர். 43 இடைத்தங்கல் முகாம்களில் ஆயிரத்து 240 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 128 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வவுனியா மாவட்டத்தில் ஆயிரத்து 400 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 822 பேர் பாதிப்படைந்துள்ளனர். 10 இடைத்தங்கல் முகாம்களில் 126 குடும்பங்களைச் சேர்ந்த 363 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அதேநேரம் 4 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**குளத்தில் தவறி...**

இந்நிலையில் மேற்படி இளைஞரின் சடலம் அந்தக் குளத்தில் இருந்து இன்று காலை மீட்கப்பட்டது.

வவுனியா, மகாகச்சகொடி பகுதியைச் சேர்ந்த 31 வயதான சிரந்தஹசன் குண வர்த்தன என்ற இளைஞரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டது.

இது தொடர்பில் மாமடு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின் றனர்.







**நினைவேந்தலுக்கு...**

இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் மாவீரர் நினைவேந் தல் நிகழ்வுக்கு மோட்டார் சைக்கிளில் செல் லும்போதே கனரக வாகனம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகி உயிரிழந் துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின் றது.

வல்வெட்டித்துறைப் பகுதியைச் சேர்ந்த சண்முகவடிவேல் என்பவரே இவ்வாறு விபத்தில் சிக்கி உயிரிழந் துள்ளார்.

உயிரிழந்தவரது சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளது.

விபத்துத் தொடர்பான மேலதிக விசா ரணைகளை கொடிகாமப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

**காரைதீவு வெள்ள...**

மாலை மீட்புப் பணியாளர்களின் தேடுதல் நடவடிக்கையின்போது 5 மாணவர்கள் உயிருடன் காப்பாற்றப்பட்டனர்.

நேற்றும் இன்றும் மீட்புப் பணியா ளர்களின் தேடுதல் நடவடிக்கை தொடர்ந்த நிலையில் இதுவரை மொத்தமாக 7 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.


நிந்தவூர் காஷிபுல் உலூம் அறபுக் கல்லூரி மாணவர்கள் 6 பேரின் சடலங் களும், உழவு இயந்திரத்தின் சாரதி யின் சடலமும் இதுவரை மீட்கப்பட் டுள்ளன.

மீட்புப் பணியாளர்களால் வெள்ளத் தில் சிக்கிக் காணாமல்போனவர்களைத் தேடும் நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றது.

மத்ரஸா முடிந்து மாணவர்களும், உழவு இயந்திரத்தின் சாரதி மற்றும் உதவியாளரும் பயணித்துக்கொண்டி ருந்த தருணத்தில் உழவு இயந்திரம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.



மீட்புப் பணியின்போது உழவு இயந் திரத்துடன் விலையுயர்ந்த மோட்டார் சைக்கிள்கள் இரண்டும் மீட்கப்பட்டுள்ளன. இதில் பயணித்தவர்கள் எத்தனை பேர், எத்தனை பேர் காணாமல்போனார் கள் என்பதைத் துல்லியமாகக் கூற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனி னும், குறைந்தது இன்னும் 3 பேராவது காணாமல்போயிருக்கலாம் என்று நம்பப் படுகின்றது.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இது சாபக்கேடு!

இலங்கை தீவில், அது பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் பெற்றதாகக் கூறப்படும் கடந்த 75 ஆண்டுகளாக தமது வாழ்வியல் உரிமைக்காக - இருப்புக்காக - சுதந்திரத்துக்காக- தமிழினம் போராடி வருகின்றது.

தீவின் வடக்கையும் கிழக்கையும் சரித்திர காலம் தொட்டுத் தமது பூர்வீக வாழ்விடமாகவும் தாயகமாகவும் கொண்ட தமிழர்கள் அந்தப் பிரதேசத்தில் சுயாட்சிக்காக அகிம்சை வழியிலும் ஆயுத வழியிலும் தொடர்ந்து போராடி வருகிறார்கள்.

முதலில் முப்பது வருட அஹிம்சை போராட்டத்தையும் பின்னர் முப்பது வருட ஆயுதப் போராட்டத்தையும் தொடர்ந்து, களைத்துவிட்ட தமிழினம் கடந்த 15 ஆண்டுகளாக தம் உரிமை மீட்புக்காக எந்த வழியில் தங்கள் போராட்டத்தைக் கொண்டு நடத்துவது என்று தெரியாமல் தடுமாறிக் கொண்டிருக்கின்றது.

வன்முறை வழியிலான விடுதலைப் போராட்டம் தோல்வி கண்ட பின்னர் - ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்னர் - கடந்த பதினைந்து ஆண்டுகளாகத் தமிழர்கள் முன்னெடுத்த அரசியல் செல்நெறியை மூன்று பிரிவுகளுக்குள் வகைப்படுத்துகிறார்கள் அவதானிகள்.

ஒன்று - எதிர்ப்பு அரசியல். ஆட்சி அதிகாரத்தை வைத்திருக்கும் பௌத்த - சிங்கள மேலாதிக்கத் தரப்புக்கு, பெரும் தேசிய வாதத்துக்கு எதிராக உரிமை கோரிக்கையை முன்வைத்து அரசியல் நடத்துவது இந்த வகை. இலங்கைத் தமிழரசு கட்சி உட்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் அங்கத்துவக் கட்சிகள், தமிழ் தேசிய மக்கள் முன்னணி போன்றவை இந்த வகையறாக்குள் அடங்கும்.

அடுத்தது - இணக்க அரசியல். ஈ.பி.டி.பியின் தலைவர் டக்லஸ் தேவானந்தா, ஐக்கிய தேசியக் கட்சியின் மகேஸ்வரன், விஜயகலா மகேஸ்வரன், அங்கஜன் இராமநாதன் போன்றோர் நடத்திய அரசியல் இந்த இணக்க அரசியலே.

இப்போது அந்த இரண்டு அரசியல் நிலைமைகளையும் தாண்டிய 'சரணாகதி அரசியல்' வந்துவிட்டதாக கடந்த தேர்தலில் இணக்க அரசியல் செய்து வந்த ஈ.பி.டி.பியின் டக்ளஸ் தேவானந்தாவை ஆதரித்து நின்ற பாபு சர்மா கூறுகிறார்.

முடிவுற்ற தேர்தலில் இணக்கப்பாட்டு அரசியலுக்கு தமிழ் மக்கள் பெரும் ஆதரவு கொடுத்தார்கள் என்று தெரியவில்லை என அவர் குறிப்பிடுகிறார்.

யாழ்.மாவட்ட மக்கள் அநுர குமார திஸாநாயக்கவின் அரசுக்கு வாக்களித்தமை மூலம் இணக்க அரசியலை விட சரணாகதி அரசியலே சிறந்தது என்ற உணர்வுடன் செயல்பட்டிருக்கின்றனர் என அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள் என்று பாபு சர்மா சுட்டுகிறார்.

அவரின் கூற்றுத் தப்பில்லை. ஒரு வகையில் அதுதான் நிஜம். உண்மை. மெய்மை நிலை.

உலகமே பார்த்து, வியந்து, அதிசயத்து நிற்கும் விதத்தில், நினைத்துப் பார்க்க முடியாத உயரிய தியாகங்களோடு, ஒரு வீர மறப் போராட்டத்தை முன்னெடுத்த ஓர் இனத்தின் அடுத்த சந்ததிதான் இப்படி சரணாகதி அரசியலில் அடிமைப்பட்டு போய் துவண்டிருகின்றது.

தம் இனத்தின் விடுதலைக்காக தங்களையே ஆகுதியாகக் கொடுத்த உயரிய இலட்சிய வீர மறவர்களை ஆயிரக்கணக்கில் கொண்ட ஓர் இனத்தின் அடுத்த தலைமுறை நாடி இருக்கும் பாதை இந்த சரணாகதி சாக்கடைதான்.

தம் மக்களுக்காக - தம் சந்ததிகளுக்காக - 45 ஆயிரத்துக்கு அதிகமான போராளிகள் தங்கள் இன்னுயிரை உவந்தளித்த ஓர் இனத்திலிருந்து தோன்றிய அடுத்த சந்ததி ஒரேயடியாக இவ்வாறு சரணாகதி அரசியலில் விழுந்து மடிந்து போய் இருப்பது தமிழினத்தின் சாபக்கேடு.

சரணாகதி அரசியலில் மண்டியிட்டு விட்ட தமிழினம் இனி அந்த மேலாதிக்க சக்திகள் தூக்கி எறியும் பிச்சையை உரிமைகளாக சுவீகரித்துக் கொண்டு அடங்கிப் போக வேண்டியதுதான்.

இனத்தின் விடுதலைக்காக ஆயிரக்கணக்கில் மறவர்கள் உவந்தளித்த இன்னுயிர்த் தியாகம் அவமாய்ப் போய் இருப்பது தமிழினத்தின் பெரும் துரதிர்ஷ்டம்.

நம் போராட்ட வரலாறை - கடந்த கால ஈகங்களை, உயரிய தியாகங்களை மறந்து போன ஒரு சந்ததியை தன்னுடைய தலைமுறையாக கொண்ட தமிழினத்திற்கு இந்த சாபக்கேட்டில் இருந்து மீட்சி கிடைப்பது துர்லபமே.



# அரச பணியிலிருந்து ஓய்வு!

(அபு அலா )

வெளி வள திணைக்களத்தில் மேலதிக பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றி வந்த வேலாயுதம் மகேந்திரராஜா கடந்த 25 ஆம் திகதி அரச பணியில் இருந்து ஓய்வுபெற்றார்.

1990 ஆம் ஆண்டு பட்டதாரி முகாமைத்துவ பயிலுனராக அரச சேவையில் இணைந்து கொண்ட இவர், 1992 இல் திட்டமிடல் உத்தியோகத்தராக கடமையாற்றினார். பின்னர் உதவி திட்டமிடல் பணிப்பாளராக கடமையாற்றினார். ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிகொட், கார்ப் கருத்திட்டங்களில் கருத்திட்ட இணைப்பாளராகவும், உலக வங்கியின் பி.ஐ.பி. மற்றும் ஜி.ஐ.இசற். ஆகிய நிறுவனங்களில் கடமையாறினார்.

பிரதிப் பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்று வெளிவளத் திணைக்களத்தில் கடமையாற்றிய பின்னர், கிழக்கு மாகாண திட்டமிடல் செயலகத்தில் பிரதிப் பிரதம செயலாளராக 2008





ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டுவரை கடமையாற்றினார். அந்தக் காலப் பகுதியில் கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கென சிறந்த சேவையாற்றினார்.

பின்னர் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சில் திட்டமிடல் பணிப்பாளராகவும், நிதி ஆணைக்குழுவில் பணிப்பாளராகவும் பல பதவிகளை வகித்துவந்த வேலாயுதம் மகேந்திரராஜா, தனது ஓய்வு நிலை வரும் வரை வெளி வள திணைக்களத்தில் மேலதிக பணிப் பாளர் நாயகமாக கடமையாற்றி கடந்த 25 ஆம் திகதி அரச பணியிலிருந்து ஓய்வு நிலையை அடைந்தார்.

அவரின் அரச சேவையை பாராட்டி திணைக்கள அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோரால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டு, நினைவுப் பரிசில்களும் வழங்கி வைத்தனர்.

# இலங்கைத் தமிழ்த் தேசிய கட்சி மட்டக்களப்பில் அங்குரார்ப்பணம்!





(பழுவூரான்)

மண்முனைப்பற்று ஆரையம்பதி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் ஐக்கிய மக்கள் சக்தியின் அமைப்பாளருமான எஸ்.தயானந்தன் புதிதாக இலங்கை தமிழ் தேசிய கட்சியை அங்குரார்ப்பணம் செய்து வைத்துள்ளார். இந்த நிகழ்வு மட்டக்களப்பு கிரான்குளம் பகுதியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் போது உயிரிழந்த மாவீரர்களை நினைவு கூரும் முகமாக ஈகைச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இலங்கை தமிழ் தேசிய கட்சியின் செயலாளர் நாயகம் தயானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் என சுமார் 10 பேர் கலந்து கொண்டிருந்தனர்.





# கல்முனையில் அனர்த்த ஒருங்கிணைப்பு கூட்டம்!

**(வி.ரி.சகாதேவராஜா )**

கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட கல்முனை, மற்றும் கல்முனை வடக்கு ஆகிய பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட அனர்த்த கட்டுப்பாடு மற்றும் மீட்பு முகாமைத்துவ ஒருங்கிணைப்பு கூட்டம் நேற்று புதன்கிழமை (27) கல்முனை மாநகர சபை கூட்ட மண்பத்தில் நடைபெற்றது.

கல்முனை மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா கலந்து கொண்டு அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கை தொடர்பான முன்னேற்ற மற்றும் மீளாய்வு விடயங்கள் குறித்து கலந்துரையாடினார்.

கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே. அதிசயராஜ், மாநகர உதவி ஆணையாளர், உதவி பிரதேச செயலாளர், கல்முனை மாநகர பொறியியலாளர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர், பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர், பொலிஸ் மற்றும் முப்படை உயர் அதிகாரிகள், காலநிலை மாற்றம் குறித்த துறையில் பணியாற்றும் தென்கிழக்குப் பல் கலைக் கழக பொறியியல் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.எம்.அஸ்லம் சஜா, பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவ குழுவினர் மற்றும் உத்தியோகத்தர்கள் உட்பட பிரதேச முக்கியஸ்தர்களும், சமூக ஆர்வலர்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது சீரற்ற காலநிலை, மழை மற்றும் வெள்ளம் காரணமாக கல்முனை, மற்றும் கல்முனை வடக்கு பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண நடவடிக்கைகளை துரிதப் படுத்தல், இடைத்தங்கள் முகாம்களில் உள்ள மக்களுக்கு சமைத்த உணவுகள் வழங்கல், தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கை பற்றிய மீளாய்வு, அனர்த்த நிலை அதிகரிக்குமிடத்து பாதிப்புகளை குறைப்பதற்கான முன்னேற்பாடுகள் மற்றும் ஆலோசனைகள், எதிர்கால திட்டமிடல்கள் குறித்து இங்கு கலந்தாலோசிக்கப்பட்டது.

கல்முனை, மற்றும் கல்முனை வடக்கு ஆகிய பிரதேச செயலகங்களை இணைத்து ஒரே இடத்தில், அனர்த்த முகாமைத்துவ கூட்டம் நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம் பாவா எடுத்துக்கொண்ட முயற்சியின் பலனாக இந்தக் கூட்டம் இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.







# பாரிய நீர்க்குழாய் வெள்ளத்தில்; குழாய் நீர் விநியோகம் தடை!

**(வி.ரி. சகாதேவராஜா)**

அம்பாறை மாவட்ட கரையோரத்தின் சில பகுதிகளில் குழாய் நீர் விநியோகம் நேற்று புதன்கிழமையும் இன்று வியாழக்கிழமையும் தடைப்பட்டுள்ளது.

அம்பாறையில் இருந்து நிந்தவூர் பிரதான நீர்த்தாங்கிக்கு நீரை எடுத்து வருகின்ற பாரிய குழாய் உடைந்திருப்பதன் காரணமாக இந்த நீர்த்தடை ஏற்பட்டுள்ளது.

450 மில்லி மீற்றர் விட்டம் உள்ள இந்தப் பாரிய குழாய் பெரு வெள்ளத்தில் அள்ளுண்டு போயுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்மாந்துறை பிரதேசத்தின் நயினாகாட்டை அடுத்துள்ள சுரிப்போடு முந்தல் என்ற பிரதேசத்தில் உள்ள பாரிய குழாயில் இவ் வெடிப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால் நிந்தவூர், காரைதீவு, சாய்ந்தமருது போன்ற பிரதேசங்களுக்கான குழாய்நீர் விநியோகம் முற்றாக தடைப்பட்டுள்ளது. இன்றைய அனர்த்த வேளைகளில் மக்கள் பலத்த அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இது தொடர்பாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் காரைதீவு பிரதேச காரியாலய பொறுப்பதிகாரி பொறியியலாளர் விஜயரெத்தினம் விஜயசாந்தன் தெரிவிக்கையில்,



பாதிக்கப்பட்ட பிரதேசததுக்குச் சமகால பெரு வெள்ளம் காரணமாக தொழிலாளர்கள் உரிய உபகரணங்களோடு செல்ல முடியாத துர்ப்பாக்கிய நிலைமை இருக்கிறது.

இந்தப் பெரு வெள்ளம் காரணமாக ஐந்து இடங்களில் மரங்கள் வீழ்ந்து மற்றும் வெள்ளத்தில் அள்ளுண்டு எமது பாரிய குழாய் நீர் குழாய்களுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது.

இருந்தபோதிலும் நயினாகாடு என்ற இடத்தில் இருந்து 10 கிலோ மீற்றர் தூரம் தொலைவிலிருக்கும் இந்த பாரிய நீர்க்குழாய் மாத்திரம் உடைந்து துண்டாகி இருக்கிறது.

நாளைய தினம் ஓரளவுக்கு அந்த பிரதேசத்துக்கு செல்ல முடியும் என்று பார்க்கப்படுகிறது. அதன் பின்னர் குழாய் நீர் விநியோகம் சீராகும்.

இதேவேளை காரைதீவு பிரதேசத்தில் உள்ள இடைத்தங்கல்முகாம்கள் மற்றும் குடியேற்ற திட்ட வீட்டு திட்டங்களில் வாழும் மக்களுக்கு வவுசர் மூலம் குடிதண்ணீர் வழங்க நடவடிக்கை எடுத்திருக்கின்றோம்.- என்றார்.

இதேவேளை, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர் பொறியியலாளர் ஐ.எல்.கைதர் அலி ஏற்கனவே இவ்வாறானதொரு அறிவித்தலை பொது மக்களுக்கு அறிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண காலநிலை காரணமாக அம்பாறை மாவட்டத்தில் உள்ள நீர் வழங்கல் சபையின் அலுவலகங்கள் மற்றும் குடி தண்ணீர் வழங்கும் நிலையங்கள் போன்றன வெள்ள நீரால் நிரம்பியுள்ளதாலும் நீர் வழங்கல் குழாய்கள் செல்லும் பாதைகள் நீரால் பாதிக்கப்பட்டுள்ளதாலும் எந்த நேரத்திலும் நீர் வழங்கலில் தடங்கல் ஏற்படலாம்.

எனவே, இதனை கருத்திற் கொண்டு பாவனையாளர்கள் தங்களுக்கு தேவையான நீரை சேமித்து பாவிக்குமாறும் ஏதாவது இடையூறுகள் ஏற்படுமாயின் அவை தொடர்பாக நீர்ப் பாவனையாளர்களுக்கு அறிவிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.



# மட்டக்களப்பு அனர்த்த நிலைமை தொடர்பாக விசேட கலந்துரையாடல்

## விரைந்து செயற்படுமாறு அதிகாரிகளுக்கு அரச அதிபர் பணிப்பு

**(பழுவூரான்)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கும் அனர்த்த நிலைமை தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று புதன்கிழமை (27) மட்டக்களப்பில் இடம் பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் புதிய மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

மாவட்ட அரச அதிபர் இந்த அனர்த்தத்தில் சிக்குண்டு பாதிக்கப்பட்டவர்களை இனங்கண்டு அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் பெற்றுக் கொடுப்பதற்காக உடன் செயற்படுமாறு அரச திணைக்களங்களின் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் சியாத் உள்ளிட்ட மாவட்ட செயலக மற்றும் ஏனைய திணைக்களங்களின் அதிகாரிகள், முப்படையின் அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

தம்மால் இந்த அனர்த்த நிலையில் மக்களுக்காக ஆற்றக்கூடிய அனைத்து சேவைகளையும் அரச அதிபரின் ஆலோசனைக்கு அமைவாக செயற்படத் தயாராக இருப்பதாக தெரிவித்திருந்தனர்.

இந்த அனர்த்த வேளையில் முப்படையினரின் சேவை மிக அளப்பரியது என்றும் அவர்கள் மாவட்டத்தில் திறம்படத் தமது உதவிகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் அரச அதிபர் மாவட்டம் சார்பாக அவர்களுக்கு நன்றிகளையும் தெரிவித்துள்ளார்.



# 61 ஆயிரம் பேர்வரை மன்னாரில் பாதிப்பு; நிவாரணம் கிடைக்கவில்லை என விசனம்!

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வந்த கடும் மழை மற்றும் அதனால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக நேற்று புதன்கிழமை (27) மாலை 6 மணிவரை 16 ஆயிரத்து 774 குடும்பங்களைச் சேர்ந்த 61 ஆயிரத்து 674 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் 73 தாற்காலிக பாதுகாப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. குறித்த நிலையங்களில் 2 ஆயிரத்து 845 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 156 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, மழை வெள்ளம் காரணமாக கடுமையாக பாதிக்கப் பட்டும், நலன்புரி நிலையங்களுக்கு செல்லாது வீடுகளிலும், உறவினர்களின் வீடுகளிலும் உள்ள மக்களுக்கு எவ்வித உதவிகள் கிடைக்கவில்லை என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

நலன்புரி நிலையங்களுக்கு வருகிறவர்களுக்கு மாத்திரம் உதவிகள் வழங்கப்படும் என்று உரிய அதிகாரிகள் தெரிவித்து வருகின்றனர்.

எனினும் நலன்புரி நிலையங்களில் காணப்படும் இட நெருக்கடி மற்றும் மல சல கூட பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு பாதிக்கப்பட்ட பலர் நலன்புரி நிலையங்களுக்கு செல்லாமல் தமது வீடுகளிலும் நண்பர்கள் வீடுகளிலும் பல்வேறு இடர்களுடன் வசித்து வருகின்றனர். எனவே இந்த மக்களின் நலனையும் கருத்தில் கொண்டு பாதிக்கப்பட்ட மக்கள் என்ற போர்வையில் அனைவருக்கும் நிவாரணம் வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998







# நுவரெலியாவில் 226 குடும்பங்கள் சீரற்ற காலநிலையால் கடும் பாதிப்பு!

(க.கிஷாந்தன்)

சீரற்ற காலநிலையால் நுவரெலியா மாவட்டத்தில் 226 குடும்பங்களைச் சேர்ந்த 898 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக நேற்று (27) மாலை 4 மணி வரை நிலவரப்படி நுவரெலியா மாவட்டத்தில் 226 குடும்பங்களைச் சேர்ந்த 898 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட தெரிவித்துள்ளார்.

சீரற்ற காலநிலை காரணமாக 147 வீடுகள் பகுதியளவில் சேதமடைந் துள்ளன. 75 குடும்பங்களைச் சேர்ந்த 298 பேர் 7 முகாம்களில் தங்கவைக் கப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

நுவரெலியா, கந்தபளை கோட் லோட்ஜ் தோட்டத்தில் மண்சரிவு அபாயம் காரணமாக 37 குடும்பங்களைச் சேர்ந்த 161 பேர் குறித்த தோட்டத்தில் அமைந் துள்ள சமர்ஹில் பாடசாலையில் பாது காப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கொங்கோடியா தோட்டத்தில் மண் சரிவு அபாயம் காரணமாக 14 குடும் பங்களைச் சேர்ந்த 54 பேர் கோவிலில் உள்ள பாதுகாப்பான இடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

வலப்பனை குருதுஓயா அல்மா பாலர் பாடசாலையில் 14 குடும்பங் களைச் சேர்ந்த 47 பேரும், பண்டிதாய கும்புர பாடசாலையில் உள்ள பாதுகாப் பான நிலையத்தில் 8 குடும்பங்களைச் சேர்ந்த 25 பேரும் தங்கியுள்ளனர்.

மேலும், கொத்மலை டன்சினன் கொறெஞ்சி பாடசாலையில் உள்ள பாதுகாப்பான இடத்தில் 5 குடும்பங்க ளைச் சேர்ந்த 32 பேர் தங்கியுள்ளனர்.

ஹங்குராங்கெத்த திகலஹின்ன சனசமூக மண்டபத்தில் ஒரு குடும் பத்தைச் சேர்ந்த 03 பேரும் ஹோப் மத்திய பிரிவு தோட்டக் கட்டடத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 08 பேரும் தங்கியுள்ளனர்.பாதிக்கப்பட்டவர்க ளுக்கு நிவாரணம் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட் டுள்ளன. அவர்க ளுக்கு தேவையான உணவு உள்ளிட்ட வசதிகளை வழங்கு வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அட்டாளைச்சேனையில் சமைத்த உணவு!



(நூருல் ஹுதா உமர்)

கடந்த சில தினங்களாக தொடர்ச்சியாக பெய்த அடைமழை காரணமாக அட்டாளைச்சேனை பிரதேசத்தின் சில பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.குறித்த அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் இடம்பெயர்ந்து பொது இடங்களிலும் உறவினர்களின் வீடுகளிலும் உள்ளனர்.

இந்த அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சமைத்த உணவினை வழங்கும் வேலைத் திட்டமொன்றை அட்டா ளைச்சேனை பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் முன்னெ டுத்துள்ளது.

இந்த உணவானது அட்டாளைச்சேனை எஸ்.எம்.ஐ. நிறுவனத்தின் வளாகத்தில் சமைக்கப்பட்டு வருகிறது.

இந்த இடத்துக்கு விஜயம் செய்த அட்டாளைச்சேனை மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே. நௌபல் நிலமைகளை பார்வையிட்டதுடன் உணவு தயாரிப்பு பணிகள் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் முன்னெடுக் கப்படுவதை உறுதிப்படுத்தினார்.

தனவந்தர்களின் உதவியுடன் அட்டாளைச்சேனை பெரிய ஜும்ஆ பள்ளிவாசலால் சமைக்கப்படும் இந்த உண வானது பிரதேச செயலாளரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் கிராம உத்தியோகத்தர்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது என்று பள்ளிவாசல் தலைவரும் விரிவுரையாளருமான ஏ.எல்.அனீஸ் தெரிவித்தார்.





# வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களின் நலன் பேணும் சுகாதார பணியாளர்கள்

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது வெள்ள அனர்த்தத்தால் வீடுகள் பாதிக்கப்பட்டு பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸதீன் தலைமையில் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.சீ.எம். மாஹிர் உள்ளிட்ட குழுவினர் பார்வையிட்டனர்.

தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்குச் சுகாதாரமான உணவு கிடைப்பதையும் அவர்களின் பொதுச் சுகாதாரத்தை உறுதிப்படுத்தி மருத்துவ வசதிகளை செய்து கொடுப்பதற்கும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது பொது சுகாதார பரிசோதகர்களும், பொது சுகாதார மாதுக்களுக்கும் ஆலோசனைகள் வழங்கி வைக்கப்பட்டது. போசாக்கு உணவுகளை வழங்கி வைப்பது தொடர்பிலும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸதீன் தலைமையில் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.சீ.எம். மாஹிர் உள்ளிட்ட குழுவினரால் மருதமுனை வைத்தியசாலை பார்வையிடப்பட்டது. நடமாடும் மருத்துவ முகாமை உடன் தொடங்குவதற்கும் பதில் பிரதேச வைத்திய அதிகாரிக்கு அறிவுறுத்தல் வழங் கப்பட்டது. மருதமுனை வெள்ள அனர்த்தத்தால் வைத்திய சாலை வளாகமும் கட்டடங்களும் பாதிக்கப்பட்ட போதும் உத்தியோகத்தர்களும் உழியர்களும் மருத்துவ உபகர ணங்களை பாதுகாப்பாக மீட்டெடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.





# அகில இலங்கை கர்நாடக சங்கீதம்; சாதித்த மாணவிக்குக் கௌரவம்!

(த.சுபேசன்)

அகில இலங்கை கர்நாடக சங்கீத போட்டியில் தனி இசை நிகழ்வில் பங்கு பற்றி மூன்றாம் இடத்தைப் பெற்ற இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய மாணவி செல்வி சிவானந்தராஜா சிவகலைக்கான கௌரவிப்பு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை காலை மாடசாலையில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி கௌரவிப்பு நிகழ்வில் விருந்தினர்களாக தென்மராட்சிக் கல்வி வலய அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுனில் ஆரியரட்ணவும் தென்மராட்சி



கல்வி வலய சங்கீத பாட வளவாளர் திருமதி ம.லோகினியும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் மாணவியை வழிப் படுத்திய ஆசிரியை திருமதி. கருணேஸ்வரன் மற்றும் பக்கவாத்திய கலைஞரான வரணி மத்திய கல்லூரி ஆசிரியர் ரவிச்சந்திரன் ஆகியோர் மாணவியின் பெற்றோரால் கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

இடைக்குறிச்சிஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் இருந்து முதன் முறையாக அகில இலங்கை மட்ட போட்டிக்கு மாணவி ஒருவர் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# திருமலையில் மாவீரர் தின நிகழ்வு



மாவீரர் தினத்தை முன்னிட்டு நேற்று திருமலை சிவன் கோயிலடியில் மாவீரர் நிகழ்வு உணர்வு பூர்வமாக வேலுப்பிள்ளை சச்சீதானந்தம் தலைமையில் அனுஷ்டிக்கப்பட்டது.

# மாவடி முன்மாரி துயிலும் இல்லத்தில் நேற்று நடந்த மாவீரர் தின நிகழ்வுகள்









மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை மாவடி முன்மாரி துயிலும் இல்லத்தில் நேற்று (27) மாவீரர் தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் 2 ஆம் லெப்பினட் தங்க நிலாவின் தாயார் கிருஷ்ணபிள்ளை புண்ணியவதி பொதுச்சுடர் ஏற்றினார். இரண்டாயித்துக்கு மேற்பட்ட பொது மக்கள் மாவீரரகளின் பெற்றோர் கலந்து தீபங்களை ஏற்ற அஞ்சலி செய்தனர்.





# ரஜினி திரையுல சூப்பர் ஸ்டார் நான் அரசியலில் சூப்பர் ஸ்டார்

## சீமான் கூறுகின்றார்

“ஒருமுறை தான் நானும் அவரும் ஒன்றாக நின்றோம். ஐயோ ஐயோ என்று குதிக்கிறார்கள். ஏன் தெரியுமா? காரணம் ரஜினி திரையுலகின் சூப்பர் ஸ்டார், நான் அரசியலில் சூப்பர் ஸ்டார். இரண்டு ஸ்டாரும் சந்தித்த உடன் பயந்து விட்டார்கள்.”

– இவ்வாறு நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

பொதுக்கூட்டம் ஒன்றில் நேற்று சீமான் உரையாற்றுகையில்,

“நானும் ஐயா ரஜினிகாந்தும் இரண்டே கால் மணி நேரம் என்ன பேசினோம் என்பது எங்களுக்குதான் தெரியும். அதை சொல்ல வேண்டிய அவசியம் எனக்கும் இல்லை, அவருக்கும் இல்லை. உங்கள் வீட்டில் காதுகுத்து, கல்யாணம், புத்தகம் வெளியீடு என அனைத்துக்கும் அவரை கூப்பிட்டு கூட வைத்துக் கொள்கிறீர்கள். ஆனால் ஒருமுறை தான் நானும் அவரும் ஒன்றாக நின்றோம். ஐயோ ஐயோ என்று குதிக்கிறார்கள். ஏன் தெரியுமா? காரணம் அவர் திரையுலகின் சூப்பர் ஸ்டார், நான் அரசியலில் சூப்பர் ஸ்டார். இரண்டு ஸ்டாரும் சந்தித்த உடன் பயந்து விட்டார்கள்.

நான் இல்லையென்றால் எட்டு வழிச் சாலை வந்திருக்கும். நான் இல்லையென்றால் பரந்தூரில் விமான நிலையம் கட்டி இருப்பார்கள். நான் இல்லையென்றால் காட்டுப் பள்ளியில் துறைமுகம் கட்டி இருப்பார்கள். ஆனால் நானும் என் படையும் இருக்கும் வரை உங்களால் இவற்றை கட்டிவிட முடியுமா? நான் சாத்தியமில்லாததை பேசுவேன் என்று சொல்கிறார்கள். சாத்தியம் இல்லாதவற்றை சாத்தியப்படுத்துபவனுக்கு பெயர்தான் புரட்சியாளன்.” – என்றார்.

முன்னதாக சில தினங்களுக்கு முன்பு சென்னை போயஸ் கார்டனில் உள்ள நடிகர் ரஜினிகாந்தின் இல்லத்தில் சீமான் அவரை நேரில் சந்தித்து உரையாடினார். இது தொடர்பான புகைப்படம் வெளியாகி இணையத்தில் விவாதத்தை உருவாக்கியது. இந்த சந்திப்பு குறித்து கருத்து தெரிவித்த சீமான், ரஜினியுடன் அரசியல் சூழல் குறித்து உரையாடினோம் என்று தெரிவித்தார்.

# ஆடு மேய்த்தவர்கள் மீது மோதிய கார் 5 பெண்கள் உடல் நசுங்கி உயிரிழப்பு

செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் அருகே பண்டிதமேடு பகுதியில் ஆடு, மாடு மேய்த்துக் கொண்டிருந்த பெண்கள் மீது கார் மோதி பயங்கர விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில், சம்பவ இடத்திலேயே 5 பெண்கள் உடல் நசுங்கி உயிரிழந்துள்ளனர்.

முதற்கட்ட விசாரணையில், சென்னையில் இருந்து மாமல்லபுரம் நோக்கி சென்ற கார் வீதி ஓரம் அமர்ந்திருந்தவர்கள் மீது மோதியிருப்பது தெரியவந்துள்ளது.

மேலும், உடல் நசுங்கி உயிரிழந்த 5 பேரும் பண்டிதமேடு பகுதியை சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.



இந்த சம்பவத்தில் காரை ஓட்டி வந்த இளைஞரை பிடித்த உயிரிழந்த பெண்களின் உறவினர்கள் சரமாரியாக தாக்கியுள்ளனர்.

கார் ஓட்டி வந்தவர்கள் குடிபோதையில் இருந்தனர் என தகவல் வெளியாகியுள்ளது. இருவரை கைது பிடித்த பொலிஸார் விபத்து தொடர்பாக மேற்கொண்டு விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும், சம்பவ இடத்திற்கு மாவட்ட ஆட்சியர் வர வேண்டும் என வலியுறுத்தி உடல்களை சாலையில் வைத்து கிராம மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.





போர் நிறுத்தம் அமுல்:

# லெபனானுக்குத் திரும்பும் ஆயிரக்கணக்கான மக்கள்

இஸ்ரேலுக்கும் லெபானின் ஹெஸ்புல்லா அமைப்புக்கும் இடையிலான போர் நிறுத்தம் அமுலுக்கு வந்துள்ள நிலையில், ஆயிரத்துக்கும் அதிகமானோர் லெபனானுக்கு திரும்பியுள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தநிலையில், தென் லெபானை நோக்கி மக்கள் மீளத் திரும்புகின்றனர் என அந்த தகவல்கள் குறிப்பிடுகின்றன. அத்துடன், சில பகுதிகளுக்குச் செல்ல வேண்டாம் எனவும் இஸ்ரேல் எச்சரித்துள்ளது.

இஸ்ரேலுக்கும் ஹெஸ்புல்லாவுக்கும் இடையிலான போர் நிறுத்தத்தை வரவேற்பதாக ஈரான் அறிவித்துள்ளது.

இதேவேளை, லெபனானில் போர்நிறுத்தம் அமுல் படுத்தப்பட்டுள்ள நிலையில், காசாவில் தாக்குதல்கள் தொடர்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# மியன்மார் இராணுவ தளபதிக்கு பிடியாணை; சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் கோரிக்கை

மியன்மார் இராணுவ தளபதி மின் ஆங் ஹ்லைங்கிற்கு பிடியாணை பிறப்பிக்குமாறு சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் கோரப்பட்டுள்ளது.

ரோஹிங்யா இனத்தவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மனிதாபிமான குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் தலைமை வழக்கறிஞர் கரீம் கான் தெரிவித்துள்ளார்.

அதற்கு போதிய ஆதாரங்கள் தங்களிடம் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2017ஆம் ஆண்டு பர்மிய இராணுவத்தினரால் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் இனப்படுகொலையை அடுத்து லட்சக்கணக்கான ரோஹிங்யா இனத்தவர்கள் மியன்மாரை விட்டு வெளியேறியிருந்தனர்.

அப்போது அங்கு அமைதியின்மை ஏற்பட்டு 1 மாதத்துக்குள் 730 சிறுவர்கள் உட்பட 6,700 ரோஹிங்யா இனத்தவர்கள் கொல்லப்பட்டனர் என தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், மியன்மார் இராணுவத்தினர், ரோஹிங்யா இன பெண்கள் மற்றும் சிறுமிகளைத் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினர் என சர்வதேச மன்னிப்பு சபை தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் மியன்மார் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் கையெழுத்திடாத காரணத்தினால் அந்த நாட்டு இராணுவத்தினருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதில் சாத்தியமற்ற நிலைமை காணப்பட்டது.

எனினும் ரோஹிங்யா இனத்தவர்கள் அகதிகளாக தஞ்சமடைந்த பங்களாதேஷ், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் கையெழுத்திட்டுள்ளதன் அடிப்படையில் மியன்மார் இராணுவத்துக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது.



இந்தநிலையில் மியன்மார் இராணுவ தலைவருக்கு எதிரான பிடியாணையைக் கோருவதற்கான ஆதாரங்கள் உள்ளதாகச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் தலைமை வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் மியன்மார் இராணுவத்துக்கு எதிராக இனப்படுகொலை விசாரணையும் இடம்பெற்று வருகின்றது.

கனடா முரசு

பக்கங்கள் 03

வியாழக்கிழமை 28/11/2024

## பனிப்பொழிவிற்கு ஆயத்தமாகும் கனடிய விமான நிலையம்

கனடாவின் முக்கிய விமான நிலையங்களில் ஒன்றான பியர்சன் விமான நிலையம் எதிர் வரும் பனிப்பொழிவு காலத்திற்கு ஆயத்தமாகி வருவதாக தெரி விக்கப்படுகிறது.

கனடா மற்றும் அமெ 02





# நோவா ஸ்கோஷியா சட்டமன்ற தேர்தலில் முற்போக்கு கன்சர்வேட்டிவ் கட்சி வெற்றி



கனடாவின் நோவா ஸ்கோஷியா மாகாணத்தில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் முற்போக்கு கன்சர்வேட்டிவ் கட்சி வெற்றியீட்டியுள்ளது.

இதன்படி கட்சியின் தலைவரும் மாகாண முதல்வருமான டீம் ஹுஸ்டன் இரண்டாம் தடவையாகவும் முதல்வராக பதவி ஏற்றுக்கொள்ள உள்ளார்.

டீம் ஹுஸ்டன் தனது பதவிக்காலம் முடிவதற்கு ஏழு மாதங்களுக்கு முன்னதாகவே இடைத்தேர்தல் நடத்தியிருந்தார்.

எனினும் இந்த தேர்தலில் டீம் ஹுஸ்டன் முற்போக்கு கன்சர்வேட்டிவ் கட்சி பாரிய வெற்றியை பதிவு செய்துள்ளது.





# கனடாவின் மாகாண முதல்வர்கள் ட்ரூடோவை சந்திக்கக் கோரிக்கை

கனடாவின் மாகாண முதல்வர்கள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுடன் அவசர சந்திப்பு ஒன்றை நடத்த கோரிக்கை விடுத்துள்ளனர்.

அமெரிக்காவில் டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் ஜனாதிபதி பொறுப்பினை ஏற்றுக் கொள்வதற்கு முன்னதாக இந்த சந்திப்பினை நடத்த வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனடிய பொருள்கள் மீது வரி விதிக்கப்படும் என ட்ரம்ப் அறிவித்திருந்தார்.

எக்ஸ் தளத்தில் இது தொடர்பாக அவர் அறிவித்திருந்தார். பதவியை பொறுப்பேற்றதன் பின்னர் வரி அறவீடு செய்யப்படும் என அவர் குறிப்பிட்டு இருந்தார்.

இந்த வகையில் மாகாண முதல்வர்கள் இந்த அறவீடு தொடர்பில் நடவடிக்கை எடுக்க உள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

# செயற்கை நுண்ணறிவில் உருவாக்கப்பட்ட காணொலிகளை பயன்படுத்தி மோசடிகள்

கனடாவிற்குள் புதிதாக குடியேறுவோருக்கு எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய செயற்கை நுண்ணறிவு மூலம் உருவாக்கப்பட்ட காணொலிகளை கொண்டு மோசடிகள் இடம்பெற்று வருகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

ரொறன்ரோவை மையமாகக் கொண்ட சட்டத்தரணி என்ற போர்வையில் இந்த மோசடி இடம் பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கனடாவில் குடியேற விரும்புவோர் இந்த மோசடிகளில் சிக்கி ஏமாற வேண்டாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பிரபல குடிவரவு சட்டத்தரணி மெக்ஸ் சவுத்திரி என்பவரைப் போன்றே போலி காணொலி தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.



இவ்வாறு போலிக் காணொலிகள் மூலம் மோசடிகள் இடம்பெறுகின்றன எனவும் கனடாவிற்கு புதிதாக வந்தவர்கள், குடியேறுவதற்கு காத்திருப்போர் இந்த விடயத்தில் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# டொனால்ட் ட்ரம்ப் அறிவிப்பு ஆபத்தானது: ஒன்றாறியோ முதல்வர் டக் போர்ட் தகவல்

அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவாகியுள்ள டொனால்ட் டிரம்பின் அறிவிப்பு அபாயகரமானது என கனடா தெரிவித்துள்ளது.

கனடா மேச்சிகோ ஆகிய நாடுகள் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கு 25 வீத வரி விதிக்கப்படும் என என்ற யோசனையை ட்ரம்ப் முன்மொழிந்துள்ளார்.

ட்ரம்பின் இந்த யோசனையானது கனடாவின் ஒன்றாறியோ மாகாணத்தை மிக மோசமாக பாதிக்கும் என முதல்வர் டக் போர்ட் தெரிவித்துள்ளார்.

இதனால் கனடிய ஒன்றாறியோ மாகாண ஏற்றுமதி துறை பெரும் பின்னடைவை எதிர் நோக்க நேரிடலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குயின்ஸ்பார்க்கில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.



கடமைகளைப் பொறுப்பேற்ற முதல் நாளிலேயே வரிவிதிப்பு குறித்த நிறைவேற்று அதிகார உத்தரவு பிறப்பிக்கப்படும் என டிரம்ப் தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு வரி விதிப்பு மேற்கொள்ளப்பட்டால் மாகாணத்தின் பொருளாதாரத்திற்கு பாரிய பின்னடைவு ஏற்படும் எனவும் குறிப்பாக தொழில் வாய்ப்புகளுக்கு பெரும் தாக்கம் ஏற்படும் என்றும் டக் போர்ட் தெரிவித்துள்ளார்.

## பனிப்பொழிவிற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரிக்கா ஆகிய நாடுகள் பனி மற்றும் பனிப்புயல் போன்ற இயற்கை அனர்த்தங்களுக்கு ஆயத்தமாகி வருகின்றன.

அந்த வகையில் டொரன்டோவின் பியர்சன் விமான நிலைய பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க தீர்மானித்துள்ளது.

ஏற்கனவே பழமையான இயந்திர உபகரணங்களை பதிலீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

பயிற்றப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் பனிப்புயல் மற்றும் பனிப் பொழிவு போன்ற இயற்கை சீர்கேடுகளின் போது விமான நிலையத்தின் பணிகளை சீராக முன்னெடுக்க முடியும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.


கனடாவின் மிகவும் சன நெரிசல்



மிக்க விமான நிலையமாக பியர்சன் விமான நிலையம் கருதப்படுகின்றது.

வாரம் ஒன்றிற்கு சுமார் ஒன்பது லட்சம் பயணிகள் இந்த விமான நிலையத்தை பயன்படுத்துகின்றனர்.

எனவே விமான நிலைய சேவையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.





# றொறன்ரோவில் 4 மாத சிசுவை கொலைசெய்த தாய் ஒருவர் கைது

கனடாவின் றொறன்ரோவில் நான்கு மாத சிசுவை கொலை செய்த தாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

றொறன்ரோ பொலிஸார் இந்த பெண் மீது கொலைக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளனர்.

கடந்த வாரம் றொறன்ரோவின் மிட்டவுன் பகுதியில் நான்கு மாத சிசுவொன்று கீழே விழுந்து படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டது.

தனது நான்கு மாத குழந்தையை காணவில்லை என சிசுவின் தந்தை பொலிஸாரிடம் தொலைபேசி வழியாக முறைப்பாடு செய்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளனர்.

சம்பவ இடத்தில் படுகாயமடைந்த நிலையில் கிடந்த சிசு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் 30 வயதான காரிஸா எட்வர்ட்ஸ் என்ற சிசுவின் தாய் கைது செய்யப் பட்டுள்ளார்.

இந்தப் பெண் படுகொலையில் ஈடுபட்டார் என பொலிஸார் குற்றம் சுமத்தியுள்ளனர்.

றொறன்ரோவில் இந்த ஆண்டில் பதிவான 79 ஆவது படுகொலைச் சம்பவம் இதுவென்பது குறிப்பிடத் தக்கது.







